# கண்ணன் லீலைகள்

கொடியிடையாள் தேவகியின் மணநாளில்
இடிபோல் வந்த சொல் கேட்ட கம்சனும்
மடிதனிலிருந்தவாளதனை உருவிடவே பின்
அடிபணிந்தான், வசுதேவர் சொல்கேட்டு!

சொல்படி சிசுவை அவனிடம் கொடுக்க
கொல்லும் அவ்வரக்கன் தன் செயல் முடிக்க
அல்லலுறும் வானவர் துயர் துடைக்க
வல்லவனவன் எட்டாவதாக வந்துபிறந்தானே!

பிறந்த இடம் விட்டு வேற்றிடத்தில்
மறைந்து வாழநினைத்த கள்வனவன்
விரைந்து ஆயர்பாடி மனைசேர்ந்து
குறையொன்றுமின்றி வளர்ந்து வந்தானே!

வளரும் மைந்தன் குறும்புகள்கூட
திரளும் வெண்ணையை திருடியேதின்ன

மருளும் மங்கையர் சேலையையொளிக்க
உருளும் சகடையில் கட்டுண்ட விடந்தானே!

விடமதைக்  கக்கும் நாகத்தின்  மீதேறி
நடமதுபுரிந்து அதன் செருக்கினையடக்கி
குடமது உருட்டி வெண்ணையும் உண்டு
வடமதனால் கண்ணன் கட்டுண்டானே!

கட்டுண்டவன் தளிர்நடை நடக்க
நட்டுருந்த மரமிரண்டும் கீழே சாய்க்க
பட்டுமேனி கெட்டதோயென தாயுமலர
மொட்டு மலர்ந்தாப் போல் வாய் மலர்ந்தானே!

மலர்ந்த வாய்தனில் மண்ணையள் ளியுண்டு
மிருளும் விழியிரண்டும் கயலென சுழன்று
அலர்ந்த வாய்தனில் உலகமதைக்கண்டு
அருளும் அவன்மாயை அறியாள் அவன்தாயே!

தாயைப்போல வந்து முலையுண்ணத்தந்து
சேயைக்கொல்ல நஞ்சது கலந்துண்ணச்செய்த

பேயைமுலையுடன் சேர்த்து உறிஞ்சிவதைத்து
மாயைபல புரிந்தான் எண்ணமீடேறுவரை!

வரைதனை குடையாக்கி ஆனிரை காத்து
இரைதேடும் இந்திரனது செருக்கதனையடக்கி
மறைபோற்றும்மணிவண்ணனும் அண்ணனுடனே
விரைந்தேசேர்ந்தான் கொன்றிட வஞ்சனையாய்!

வஞ்சமது பலபுரிந்து பிள்ளைதனைக் கொல்ல
கஞ்சனும் செய்தான் சதிகள் பலபல;
அஞ்சன வண்ணனும் அவனுடன் பொருதி
நெஞ்சமதைப் பிளந்தான் பிஞ்சுக் கரங்களாலே!